## Copy of Deposition

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண்.02/2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி:1**

பெயர்: கார்த்தி (பி.வா.சா. 1) நாள்:08.07.2025

த.பெ:

**2025ம்** ஆண்டு ஜுலை **மாதம் 08ம் நாள் செவ்வாய்கிழமை** பிரதிவாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**பி.வா.சா1 - குறுக்கு விசாரணை (வாதி தரப்பு):-**

தாவா இடம் யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்றால் தனலட்சுமியிடம் இருந்து வாங்கப்பட்டது. தனலட்சுமிக்கு 1ம் பிரதிவாதி, தங்கராசு ஆகியோர் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரம் 37 செண்ட் எழுதி கொடுக்கப்பட்டது. மேற்படி 37 செண்ட் போக எனது அப்பாவிடம் மீதம் எத்தனை செண்ட் இருந்தது என்றால் 36 செண்ட் இருந்தது. 36 செண்டை தாவா தாக்கல் செய்தவதற்கு முன்பு 1ம் பிரதிவாதியும், தங்கராசும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். தங்கராசுவிடம் இருந்து நான் 36 செண்ட்டை வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல, 16 செண்ட் மட்டும் தான் வாங்கினேன். 1ம் பிரதிவாதியும், தங்கராசுவும் 4 செண்ட்டை யாருக்கு விற்றார்கள் என்று தற்போது ஞாபகம் இல்லை.

2. மேற்படி 36 செண்டில் 4 செண்ட் விற்றதுபோக மீதம் இருந்த 32 செண்டில் 16 செண்ட் எங்களுக்கும், மீதம் 16 செண்ட் தங்கராசு என்பவருக்கும் என்றால் சரிதான். தங்கராசுவிடம் இருந்த 16 செண்ட்டை தான் தாவா தாக்கல் செய்த பிறகு வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரம் பெற்ற தனலட்சுமி யார் யாருக்கு கிரையம்செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு நினைவிருக்கிறதா எனறால் இருக்கிறது. 02.01.2008ல் தனலட்சுமி வாதி சந்திரசேகருக்கு 37 செண்டில் 26 செண்ட்டை எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். 24.01.2008ல் தனலட்சுமி மீதமிருந்த 11 செண்டில் 7 செண்டை எழுதி கொடுத்தார் என்ற விவரம் தெரியும் என்றால் தெரியும். 09.12.2011ல் தனலட்சுமி ரங்கசாமி என்பவருக்கு 2 செண்டை எழுதிகொடுத்தது தெரியும் என்றால் தெரியும்.

3. 37 செண்டில் எழுதிகொடுத்தது போக மீதியிருந்த 2 செண்டை தட வழியாக எழுதி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, தவறு. நான் தங்கராசுவிடம் இருந்து எப்போது கிரயம் பெற்றேன் என்றால் வருடம் சுமார் 2018 இருக்கும் தற்போது சரியாக ஞாபகம் இல்லை. நான் 12.02.2018ல் தங்கராசுவிடம் இருந்து எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். இந்த வழக்கு 03.01.2018ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் நகல்களை பெற்றபிறகு தான் பி.த.சா.ஆ.2ஐ தயார் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் தயாரிக்கும் போது வாதியின் ஆவணங்களை சரிபார்த்து

தான் தயார் செய்தோம் என்றால் இல்லை.  வாதி தயார் செய்த பத்திரத்தை பார்த்து தான் பி.த.சா.ஆ.2ஐ தங்களுக்கு தகுந்தாற்போல் தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி தனலட்சுமி எழுதி கொடுத்த ஆவணத்தில் என்ன சரத்துகள் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.  தங்கராசு மனைவி தான் தனலட்சுமி என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.  வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை  ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

sd/(G.Pandiarajan)

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை  நடுவர், கொடுமுடி.